வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி 16.05.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

நெருக்கடியான நேரங்களில் நம் நாட்டின் நலன்களுக்கு விரோதமாக செயல்படும் நாடுகளை ஆதரிக்க முடியாது என குடியரசு துணைத் தலைவர் திரு ஜக்திப் தன்கர் தெரிவித்துள்ளார்.

90 மீட்டர் தூரம் ஈட்டி எறிந்து புதிய சாதனை படைத்துள்ள வீரர் நீரஜ் சோப்ரா-விற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி, வாழ்த்துத் தெரிவித்துள்ளார்

புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற தேசிய கொடி வெற்றி பேரணியை துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் தொடக்கி வைத்தார்.

மத்திய உள்துறை அமைச்சகத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட 3 குற்றவியல் சட்டம் குறித்து புதுச்சேரியில் நடத்தப்பட்ட மக்கள் மன்றத்தில் விவரிக்கப்பட்டது.

தன்கர் (11)

நெருக்கடியான நேரங்களில் நம் நாட்டின் நலன்களுக்கு விரோதமாக செயல்படும் நாடுகளை ஆதரிக்க முடியாது எனவும், பொருளாதார

தேசியவாதம் பற்றி நாம் ஒவ்வொருவரும் ஆழமாக சிந்திக்க வேண்டிய நேரம் வந்துவிட்டதாகவும் குடியரசு துணைத் தலைவர் திரு ஜக்திப் தன்கர் கூறியுள்ளார். புதுடெல்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் இன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார். கல்வி மற்றும் ஆராய்ச்சி குறித்து பேசிய அவர், கல்வியை வணிக மயமாக்குவதை ஏற்க முடியாது என கூறினார். நமது நாகரீக நெறிமுறைகளின் படி, கல்வியும், மருத்துவமும் பொருள் ஈட்டும் தொழில்கள் அல்ல என்றும், இவை அனைத்தும் சேவையாகவே பார்க்க வேண்டும் என்றும் குடியரசு துணைத் தலைவர் வலியுறுத்தினார்.

ஜெய்சங்கர் (9)

இந்திய-அமெரிக்கா இடையிலான இருதரப்பு வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதாக மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார். வாஷிங்டன்னில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பரஸ்பர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான தற்போதைய பேச்சுவார்த்தைகளில் இருநாடுகளின் நலன்களும் பாதுகாக்கப்படுவது உறுதி செய்யப்படும்

என்றார். இதனிடையே, அமெரிக்க பொருட்கள் மீதான வரி விலக்கு முடிவுகளை இறுதி செய்ய இந்தியாவை தாம் விரைவுபடுத்தவில்லை என அமெரிக்க அதிபர் திரு டொனல்ட் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

*நீரஜ் சோப்ரா* (6)

தோஹா டயமண்ட் லீக் போட்டியில், 90 மீட்டர் தூரம் ஈட்டி எறிந்து புதிய சாதனை படைத்துள்ள வீரர் நீரஜ் சோப்ரா-விற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி, சமூக ஊடகப் பதிவில் வாழ்த்துத் தெரிவித்துள்ளார். இது அவரது இடைவிடாத அர்ப்பணிப்பு, ஒழுக்கம் மற்றும் ஆர்வத்தால் கிடைத்த வெற்றி என்றும், நீரஜ் சோப்ரா-வால் இந்தியா மகிழ்ச்சி அடைந்து பெருமை கொள்கிறது என்றும் பிரதமர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

*பரம் வீர் சக்ரா* 1 (7)

ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையின் வெற்றியை நாம் கொண்டாடி வரும் நிலையில், இந்தியப் படையினரின் வீரத்திற்கு நாடு தலை வணங்குகிறது. பாதுகாப்புப் படையினருக்கு புகழாரம் சூட்டும் வகையில், ஆகாஷ்வாணி செய்திப் பிரிவு சிறப்பு தொடர் ஒன்றை

ஒலிபரப்பி வருகிறது. இதில் இன்றைய தினம், கார்கில் போரின் போது நாட்டிற்காக உயிர்த் தியாகம் செய்த, பரம்வீர் சக்ரா விருதாளர் கேப்டன் மனோஜ் குமார் பாண்டே-யை, நாம் நினைவு கூர்கிறோம்.....

(வாய்ஸ்)

*பரம்வீர் சக்ரா* 2 (19)

(வாய்ஸ்)

உத்தரபிரதேஷ் மாநிலம், சீதாப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த கேப்டன் மனோஜ் குமார் பாண்டே, தேசிய பாதுகாப்பு அகாடமி, மற்றும், இந்திய ராணுவ அகாடமியில் பயின்று, 11ஆவது கோர்க்கா ரைஃபிள்ஸ் படைப் பிரிவின் 1ஆம் பெட்டாலியனில், லெப்டினென்ட்-டாக சேர்த்துக் கொள்ளப் பட்டவர். ஆபரேஷன் விஜய் ராணுவ நடவடிக்கையின் போது, துணிச்சலான தொடர் தாக்குதல்கள் மூலம் ஊடுருவல்காரர்களை பின்வாங்கச் செய்து, பட்டாலிக் பகுதியில், ஜூபார் டாப் உள்ளிட்ட இடங்களை கைப்பற்றியதன் மூலம், எதிரிகளுக்கு ஏராளமான இழப்புகளை ஏற்படுத்தியவர், கேப்டன் பாண்டே. என் இரத்தம் நாட்டிற்கானது என்பதை நிரூபிக்கும் முன்னர் மரணம் என்னை நெருங்கினால் மரணத்தையே கொல்வேன் என்ற அவரது வார்த்தைகள், அசைக்க முடியாத அவரது துணிச்சலையும், மன உறுதிப்பாட்டையும், வெளிப்படுத்துகின்றன. 1999ஆம் ஆண்டு, ஜூலை 2-3ஆம் தேதிகளுக்கு

இடைப்பட்ட இரவில், கேப்டன் பாண்டே தலைமையிலான படைப் பிரிவினர், தங்களின் இறுதி இலக்கான கலுபார் பகுதியை நோக்கி முன்னெறிக் கொண்டு இருந்த போது, சுற்றி இருந்து மலைப் பகுதிகளில் இருந்து, எதிரிகளின் குண்டு மழைக்கு ஆளாயினர். கேப்டன் பாண்டே, கொஞ்சம் கூட அஞ்சாமல், எதிரிகளின் முதல் நிலையைத் தாக்கி, எதிரிப் படையினர் இருவரை கொன்ற பின்னர், மேலும் இருவரை கொன்று,

*பரம்வீர் சக்ரா* 3 (10)

எதிரிகளின் 2ஆவது நிலையையும் தாக்கி அழித்தார். 3ஆவது நிலையை அகற்றும் முயற்சியில் ஈடுபட்ட போது, தோளிலும், கால்களிலும் காயம் ஏற்பட்ட போதிலும், அவர் அதைப் பற்றி கவலைப்படாமல், எதிரிகளின் 4ஆவது நிலையை தமது வீரர்களுடன் இணைந்து தாக்கி, கையெறி குண்டு மூலம் 4ஆவது நிலையை அழித்து அகற்றினார். நெற்றியில் மோசமான குண்டுக் காயம் தாங்கி, அபாரத் துணிச்சலுடன் கேப்டன் பாண்டே மேற்கொண்ட இந்நடவடிக்கை, இறுதியில் இந்தியப் படையினர் கலுபார் பகுதியை கைப்பற்ற அடித்தளமாக அமைந்த போதிலும், கேப்டன் பாண்டே, குண்டுக் காயங்களுக்கு பலியானார். அவரது துணிச்சலுக்கும், அதி உயர் தலைமைப் பண்பு, மற்றும், கடமைப் பற்றுக்கும் நாடு தலை வணங்குகிறது.

*நிதின் கட்கரி* (8)

வலுவான பொருளாதார வளர்ச்சி, விரைவான கட்டமைப்பு மேம்பாடு, சர்வதேச நாடுகளுடனான ஒத்துழைப்பு போன்றவை உலக அளவில் இந்தியாவின் நிலையை உயர்த்தி இருப்பதாக மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி தெரிவித்துள்ளார். பிரேசிலில் இந்திய வம்சாவளியினரிடையே உரையாற்றிய அவர், திறன் வளர்ச்சி வாய்ப்புகள், குறிப்பாக, உயிரி எரிபொருள், பசுமை ஹைட்ரஜன், தூய்மை எரிசக்தி உள்ளிட்டவற்றில் முதலீடுகள் செய்ய முன்வர வேண்டும் என வலியுறுத்தினார்.

*வெற்றி பேரணி* (3)

புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தில் ஆபரேஷன் சிந்தூர் வெற்றியை கொண்டாடும் வகையில் நடைபெற்ற தேசிய கொடி வெற்றி பேரணி இன்று நடைபெற்றது. இதுகுறித்த ஒரு செய்தித் தொகுப்பு.....

(வாய்ஸ்)

*வெற்றி பேரணி வாய்ஸ் (17)*

புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற வெற்றி பேரணி துவக்க நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் கலந்து கொண்டு, கொடியசைத்து பேரணியை தொடக்கி வைத்தார். உள்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம், சட்டமன்ற உறுப்பினர் திரு கல்யாணசுந்தரம் ஆகியோரும் இதில் கலந்து கொணடனர். பஹல்காம் பயற்கரவாத தாக்குதலுக்கு பதிலடி தரும் விதமாக இந்திய ராணுவ வீரர்கள் தாக்குதல் நடத்தி, இந்திய ராணுவத்தின் பலத்தை உலகத்திற்கு தெரியப்படுத்தியதை நினைவு கூறும் வகையிலும், அதற்கு நன்றியையும், பாராட்டையும் தெரிவிக்கும் விதமாக புதுச்சேரி மத்திய பல்கலைக் கழகம் இந்த மூவர்ண தேசிய கொடி வெற்றி பேரணியை நடத்தியது. இந்த பேரணியில் பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் பிரகாஷ்பாபு, பல்கலைக்கழக பதிவாளர் மற்றும் பேராசிரியர்கள், என்சிசி மற்றும் என்.எஸ்.எஸ்., தன்னார்வலர்கள், பல்கலைக்கழகத்தின் உறுப்பு கல்லூரியான சமூதாய கல்லூரி மற்றும் இணைப்பு பெற்ற கல்லூரிகளை சேர்ந்த 200 க்ம் மேற்பட்ட மாணவ-மாணவிகள் பங்கேற்றனர். பேரணியில் கலந்து கொண்டவர்கள், தேசிய கொடி மற்றும் தேசபக்தி பதாதைகளை கையில் ஏந்தியபடி வெற்றி முழக்கங்களை முழங்கியபடி சென்றனர்.

*மக்கள் மன்றம் (18)*

புதுச்சேரி காவல் துறை சார்பில், காவல் நிலையங்களில் மக்கள் குறை தீர்ப்பு நாள் ஒவ்வொரு சனிக்கிழமையும் நடைபெற்று வருகிறது. அதன்படி, இன்று காரைக்காலில் நடைபெற்ற மக்கள் குறை தீர்ப்பு கூட்டத்தில் காவல் துறை துணை தலைவர் திரு சத்யசுந்தரம், முதுநிலை காவல் கண்காணிப்பாளர் செல்வி லஷ்மி சவுஜன்யா ஆகியோர் கலந்து கொண்டு பொதுமக்களின் குறைகளை கேட்டு, நடவடிக்கை மேற்கொண்டனர். தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த காவல் துறை துணைத் தலைவர் திரு சத்திய சுந்தரம், மக்கள் மன்றத்தில் பொதுமக்களின் பங்கேற்பு மகிழ்ச்சி அளிப்பதாகவும், மத்திய உள்துறை அமைச்சகத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட 3 குற்றவியல் சட்டம் குறித்து மக்களிடம் விவரிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.சைபர் க்ரைம் குற்றங்கள்குறித்து பொதுமக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று கூறிய அவர், பொதுமக்கள் தயங்காமல் காவல் நிலையத்தில் புகார் அளிக்க வேண்டும் அல்லது இலவச தொலைபேசி எண்ணான 1930 என்ற எண்ணில் புகார்களை பதிவு செய்ய வேண்டும் என கேட்டுக்கொண்டார். இதேபோல், முதலியார்பேட்டை காவல் நிலையத்தில் நடைபெற்ற கூட்டத்தில், முதுநிலை காவல் கண்காணிப்பாளர் திரு கலைவாணன் கலந்து கொண்டு பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்தார்.

*பிரதிநிதிகள் குழு* (13)

ஆபரேஷன் சிந்தூரை அடுத்து, பாகிஸ்தான் ஆதரவு பயங்கரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டை முன்வைக்க அரசு பல்வேறு கட்சி பிரதிநிதிகளை பல்வேறு நாடுகளுக்கு அனுப்புகிறது. இந்த 7 பிரதிநிதிகள் கொண்ட குழு, இம்மாத இறுதியில் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் உறுப்பினர்கள் உடன் முக்கிய நட்பு நாடுகளுக்குச் செல்ல உள்ளன. தீவிரவாதத்தை அனைத்து நிலைகளிலும் தகர்த்து நம் நாட்டின் ஒருங்கிணைந்த நிலைப்பாட்டை உலக நாடுகளிடம் விரிவாக எடுத்துரைப்பதோடு பயங்கரவாதத்திற்கு எதிராக எந்த சமரசமும் கிடையாது என்ற உறுதியான செய்தியை இந்த குழுவினர் பறைசாற்ற உள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு. ரவிசங்கர் பிரசாத், திரு. சசி தரூர், திரு. சஞ்சய் குமார் ஜா, திரு. பைஜயந்த் பாண்டா, திருமதி கனிமொழி, திருமதி சுப்ரியா சுலே மற்றும் திரு. ஸ்ரீகாந்த் ஏக்நாத் ஷிண்டே ஆகியோர் இந்த 7 குழுக்களுக்கு தலைமை தாங்குவார்கள்.

*பிரிக்ஸ்* (10)

பிரேசிலில் நடைபெறும் பிரிக்ஸ் எரிசக்தி அமைச்சர்கள் கூட்டத்தில் மத்திய எரிசக்தி துறை அமைச்சர் திரு மனோகர் லால் பங்கேற்கிறார். அரசு

முறை பயணமாக பிரேசில் செல்லும் அவர் பிரிக்ஸ் நாடுகளின் மின்துறை அமைச்சர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட உள்ளார். எரிசக்தி பாதுகாப்பு, மலிவு விலையில் எரிசக்தி தீர்வுகள், நிலைத்தன்மை உள்ளிட்டவைகள் குறித்தும் இக்கூட்டத்தின் போது விவாதிக்கப்படும். மேலும், மின்திறனில் 90 சதவிகித அதிகரிப்பு, புதுப்பிக்கப்பட்ட எரிசக்தியில் தலைமைத்துவம், பசுமை ஹைட்ரஜன், எரிசக்தி துறையில் நிலையான வளர்ச்சி உள்ளிட்டவற்றில் கடந்த 10 ஆண்டுகளில் இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட சாதனைகளும் இந்த கூட்டத்தின் போது எடுத்துரைக்கப்படும்.

ஐபிஎல் (6)

பாதுகாப்பு காரணங்களுக்காக கடந்த சில நாட்களாக நடைபெறாமல் இருந்த ஐபிஎல் கிரிக்கெட் போட்டிகள் மீண்டும் இன்று தொடங்கி, ஜுன் 3 ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. இன்றிரவு 7.30 மணிக்கு பெங்களுரு சின்னசாமி மைதானத்தில் நடைபெற உள்ள ஆட்டத்தில், பெங்களுரு ராயல் சேலன்ஞர்ஸ் அணி, நடப்பு சாம்பியனான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியை எதிர் கொள்கிறது.

முருகன் (7)

ஆபரேஷன் சிந்தூர் வெற்றிக்கு இந்திய தொழில்நுட்பம் மற்றும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ராணுவ தளவாடங்கள் முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார். கோவையில் இன்று தனியார் கல்லூரி பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு திட்டங்கள் காரணமாக 50 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு ராணுவ தளவாடங்களை இந்தியா ஏற்றுமதி செய்து வருவதாகவும் தெரிவித்தார்.